# சமூக நீதியின் காவலர் கலைஞர்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட 'முரசொலி' இதழில் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழா குறித்து ஒரு மலர் வெளிவருவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

கலைஞர் உடனான ஒரு ரசிகன் தொடர்பு என்பது, அது எழுத்தாளராக இருந்தாலும் சரி, கவிஞராக இருந்தாலும் சரி, இலக்கியவாதியாக இருந்தாலும், நடிப்பு கலைஞர்களாக இருந்தாலும், தொடர்பு என்பது அவர்களை நேரில் பார்க்கும் போது ஏற்படுவது மட்டுமல்ல, அவர்களுடைய செயல்பாடுகளை கேட்கும் போதும், பார்க்கும் போதும், திரையில் பார்க்கும் போதும் ஏற்படுவது. அவர்களுடைய சிந்தனைகளை செவி வழியில் உள்ளே நுழைப்பதால் ஏற்படுவது.


நான் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது இந்தி எதிர்ப்புப் போராட்டம், அப்போது அனைத்து மாணவர்களின் கவனமும் திராவிட முன்னேற்றக் கழகம் பக்கம் திரும்பியது. அதில் நானும் ஒருவன். நான் தீவிர மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ரசிகனாக இருப்பதால் இரண்டும் சேர்ந்து பயணிக்கும்போது, அதன் பயனாக படங்களில் சமூக நீதிக் கருத்துக்களை கலைஞர் எழுத்தாலும், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல் வரிகளாலும் அறிந்து கொண்டேன்.

அப்படி இருக்கையில் பராசக்தி படம். இடையில், நான் கேள்விப் பட்ட வரைக்கும் 8 ஆண்டுகாலம் தடை செய்யப்பட்டு பிறகு மறுபடியும் ரிலீஸ் செய்தார்கள். அப்போது கோயம்புத்தூரில் ரிலீஸ் செய்தபோதும் அந்தப் படம் 100 நாள் ஓடியது. அப்போது தான் அந்தப் படத்தைப் பார்க்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது எனக்கு சுமார் 14 அல்லது 15 வயது இருக்கும் என்று நினைக்கிறேன்.

அந்தப் படத்தை பார்த்ததில் இருந்து, அந்த வசனங்களை பேசி, மனப்பாடம் செய்து பேசுவதே ஒரு பெரிய பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. பராசக்தி வசனத்தை பேசி காட்டிய போது சக நண்பர்கள் அதற்கு பாராட்டு தெரிவிக்கின்ற போது ஒரு ஹாப்பி ஹார்மோன் உருவாகியது. ஒரு சாதனை படைத்த மாதிரி இருந்தது.

அப்போது இருந்தே புரட்சியாளர்களின் எழுத்துக்களைப் படிப்பதில் எனக்கு மிகவும் ஆர்வம் வந்தது. அப்போதில் இருந்தே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பக்கம் என்னுடைய கவனம் திரும்பியது. அப்போது ஒரு காலகட்டத்தில் சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் வந்த போது, நடிகர் சிவக்குமார் அண்ணன் மட்டும்தான் எனக்குப் பழக்கம். அவரிடம் சென்று, நடிக்கின்ற ஆர்வத்தை நான் சொன்ன போது, உங்களுக்கு நம்மூர் பாஷை, கொங்கு தமிழ் பாஷை கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. தூய தமிழ் பேசக் கூடிய நல்ல நா சுழற்சி கிடைத்து விட்டால், அதற்குப் பிறகு எந்த வட்டார வழக்கு தமிழிலும் பேசி நடிக்கலாம் என்று சொல்லி, கலைஞரின் வீர வசனங்கள் என்று, அந்தப் புத்தகத்தின் விலை 25 பைசா, நான் சொல்வது, இந்தப் புத்தகம் என் கைக்கு வந்தே 45 வருடம் ஆகிறது. அண்ணன் சிவக்குமார் அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொடுத்தார். அதை பேசி பழகியதில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மேலும் சாக்ரட்டீஸ், சேரன் செங்குட்டுவன், மனோகரா வசனங்களையும் பேசி பழகியதில் நடிப்புப் பயிற்சிக்கு மிகவும் உதவியாக இருந்தது. கண்ணாடிக்கு முன்பு நின்று நான் பேசிப் பார்த்தேன்.

அப்படிப்பட்ட நான், கலைஞர் படத்தில் நடிப்பேன் என்று நினைக்கவே இல்லை. பாலைவன ரோஜாக்கள், மண்ணின் மைந்தன் என்ற இரண்டு படங்களில் நடித்திருக்கிறேன். பாலைவன ரோஜாக்கள் படத்தில் நடிக்கும் போது அவருடன் எனக்கு நெருக்கமான பழக்கம் ஏற்பட்டது. பல விஷயங்களை நாங்கள் பகிர்ந்து கொள்வோம்.



இதில் மிகச் சிறப்பான விஷயம் என்னவென்றால், நான் நடித்த முதல் படம் 1978- ஜூலை 14- சட்டம் என் கையில், கமலஹாசன் சார் அவர்கள் இரட்டை வேடத்தில் நடித்திருப்பார், அந்தப் படத்தை டி.என். பாலு சார் அவர்கள் இயக்கியிருப்பார். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அந்தப் படத்தின் 100வது நாள் விழாவில் கலைஞர்தான் தலைமை தாங்கினார். அப்போது அவர் எதிர்க்கட்சித் தலைவர். அப்போது அவர் கையால் நான் கேடயம் வாங்கினேன்.

நான் நடித்த முதல் படத்திற்கே முத்தமிழறிஞரிடம் கேடயம் வாங்கியதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நான் கதாநாயகனான பிறகு கூட கடலோரக் கவிதைகள், இரவுப் பூக்கள் என்ற படங்கள் நூறு நாட்கள் ஓடின. ஆனால் என்ன காரணத்தினாலோ அந்தப் படங்களுக்கு விழா எடுக்க வில்லை.

மறுபடியும் பாலைவன ரோஜாக்கள், கலைஞர் வசனத்தில் நடித்து, அந்தப் படம் நூறு நாள் ஓடி அதற்கு கேடயம், கதாநாயகனாகவும் நடித்து அவரிடத்தில் கேடயம் வாங்கினேன். அப்போது கலைஞரிடம் மிகவும் நெருக்கமான உறவு ஏற்பட்டது. அதற்குப் பிறகு மண்ணின்மைந்தன் என்கிற ஒரு படத்தில் நடித்தேன். தனியாக கலைஞர் அவர்களைச் சந்திக்கும் போது மிகவும் சக பள்ளித்தோழன், கல்லூரித் தோழன் போல நடந்து கொள்வார்.

ஒரு தலைவர் என்கிற பிம்பமே இல்லாத அளவிற்கு நடந்து கொள்வார். அப்புறம் கலைஞர் அவர்களுக்குப் பேனா கொடுக்கும் விழா ஒன்று நடந்தது. அவருடைய ஆள் உயரத்துக்கு பேனா கொடுக்கும் விழா, அந்த விழா குழுத் தலைவராக என்னுடைய அருமை நண்பர் விஜயகாந்த் அவர்கள், செயலாளர் நான், பொருளாளர் இப்ராகிம் ராவுத்தர், சில காரணங்களால், அந்த விழாவிற்கு நான் போக முடியாத சூழ்நிலை உருவாகிவிட்டது. அதனை இப்போது சொல்ல விரும்பவில்லை. அந்தப் பொதுத்தேர்தலில் கலைஞர் மறுபடியும் வெற்றி பெற்று முதலமைச்சராக வந்தார். அப்போது வாழ்த்துச் சொல்வதற்காக நேரில் போனேன். மிகவும் எனக்கு தயக்கம், ஒரு குற்ற உணர்வோடுதான் போனேன்.

அப்போது கலைஞர் அவர்கள் “சத்யராஜை மேலே வரச் சொல்லுங்கள்” என்றார். மேலே கோபாலபுரம் வீட்டிற்குச் சென்றவர்களுக்கு அந்த ஹாலைப் பற்றித் தெரியும். உள்ளே வலது பக்கம் திரும்பினால், படுக்கை அறை எல்லாம் இருக்கும். அங்கு ஒரு முண்டா பனியன் போட்டுக்கிட்டு பாதி ஷேவ் செய்துக்கிட்டே தோளில் துண்டோடு வந்தார். “அய்யா வாழ்த்துக்கள்” என்றேன். “என் மீது உங்களுக்கு என்ன கோபம்?” என்றார் எடுத்தவுடனே, பிறகு ஒரு மாதிரி பேசி சமாளித்தேன். அதுவும் அவருக்குத் தெரியும். 'நானும் கேள்விப்பட்டேன்., இல்லேன்னா நீங்கள் வராமல் இருக்க மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்” என்றார். அந்த அளவுக்கு நெருக்கமான பழக்கம்.

எப்போதுமே, அவர் மேடைகளில் இருக்கும் போது 'பராசக்தி' வசனம் பேசிக் காட்டுவேன். நான் தீவிரமான எம்.ஜி.ஆர். ரசிகன் என்று அவருக்குத் தெரியும். “நாம்” என்கிற படம், முதன் முதலாக கலைஞர் அவர்கள், மக்கள் திலகம் அவர்கள், காசிலிங்கம் அவர்கள், மாபெரும் வில்லன் நடிகர் பி.எஸ்.வீரப்பா இவர்கள் நான்கு பேர் கூட்டாக சேர்ந்து எடுத்த படம்.

அந்தப் படத்தில் வரும் ஒரு வசனத்தை பேசிக் காட்டி, இதனை ஏதாவது ஒரு மேடையில் பேசிக் காட்டுங்கள் என்றார்,

“என்ன. முகத்தில் ஆச்சரியக்குறி?”

பி.எஸ்.வீரப்பா வில்லன், எம்.ஜி.ஆரைப் பார்த்து கேட்பார்.

“ஆம், ஆச்சரியக்குறிதான், அதை சற்று வளைத்தால் கேள்விக்குறியாக மாறி விடும், கேள்விக்குறியும், அரிவாளும் ஒரே போல் தான் இருக்கும் என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள்!”

அப்படி அன்று மக்கள் திலகம் பேசிய ஒரு வசனம், இதனை எனக்குச் சொல்லிக் காட்டினார்.

அதே போல் அவர் மீண்டும் முதலமைச்சராக வந்த போது 'எம்.ஜி.ஆர்.விருது' எனக்குக் கொடுத்தார். 'பெரியார்' படம் நடித்த போது 'பெரியார் விருது' எனக்குக் கொடுத்தார். 'பெரியார்' படத்தில் நடித்ததற்காக 'சிறந்த நடிகர் விருது' கொடுத்தார். இதே மாதிரி மூன்று விருதுகள் வாங்கினேன் பெரியார் படத்தின் 100 வது நாள் விழாவில், பெரியார் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் அணிந்திருந்த மோதிரத்தை எனக்குப் பரிசாகக் கொடுத்தார்.

ஆசிரியர் வீரமணி அய்யா அவர்கள், அருங்காட்சியகத்தில் இருந்து எடுத்து கலைஞர் கையில் கொடுத்து எனக்கு அணிவிக்கச் சொன்னார். கலைஞர் அவர்கள் பேசும் போது, “இந்த மோதிரத்தின் மீது பலருக்கும் ஒரு கண் இருந்தது. அதே போல் எனக்கும் ஒரு கண் இருந்தது. ஆகவே இந்த மோதிரத்தை நான் பொறாமையோடு தம்பி சத்யராஜ் கையில் அணிவிக்கிறேன். ஆனால், பொருத்தமான கைகளுக்குத்தான் அந்த மோதிரம் சென்று இருக்கிறது” என்று பாராட்டினார்.

காவேரி மருத்துவமனையில் அவர் உடல்நலமில்லாமல் இருந்த போது, நடந்த கடைசி பிறந்த நாள் விழா பெரியார் திடலில் அமைச்சர் சேகர்பாபு ஏற்பாடு செய்திருந்த விழா. அந்த விழாவில் நான் கலந்து கொண்டு பேசியது, எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அதே மாதிரி கலைஞர் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்த போது, அங்கே ராஜாஜி ஹாலுக்குப் போனேன். அப்போது நம்மை விட்டு பிரிந்ததினால் ஏற்பட்ட கண்ணீரை விட அப்போது தான் ஒரு பெரிய பிரச்சினை போய்க்கொண்டு இருந்தது. கலைஞர் அவர்களுக்கு கடற்கரையில் அவரது உடலைப் புதைப்பதற்கு இடம் கிடைக்குமா, கிடைக்காதா என்ற பெரிய பிரச்சினை இருந்தது. நான் கண்கலங்கச் சென்று கலைஞர் அவர்களின் உடலைப் பார்த்தேன். அப்போது, இன்றைய தமிழ் நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அந்த துக்கத்தோடு சேர்ந்து ஒரு ஆனந்தக் கண்ணீரும் பெருக்கெடுத்து ஓடியது. அது என்னவென்றால், கலைஞர் அவர்களுக்கு கடற்கரையில் இடம் கிடைத்துவிட்டது என்ற செய்திதான். அதில் இன்னமும் ஒரு சோகமான கண்ணீர், ஆனந்தக் கண்ணீர் இரண்டும் கலந்து இன்றைய முதல்வரிடத்தில் வெளிப்பட்டது.

அதனைப் பார்த்து நானும் ரொம்ப கண் கலங்கிவிட்டேன். அப்போது, இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை பார்த்து ஆறுதல் சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பினேன்.

இவைகள் எல்லாம் என் மனதில் ஆழமாக பதிந்த விஷயங்கள். கலைஞர் அவர்கள் இருந்தபோது கொண்டாடப்பட்ட கடைசி பிறந்த நாள் விழாவில், எப்போதும் அவரது வசனத்தை மேடையில் பேசி காட்டிக்கொண்டு இருக்கிறோமே, அவருடைய சாதனைகளை பேசிக் காட்டுவோம் என்று திராவிடர் கழகத்தில் இருக்கின்ற தம்பி பிரின்ஸ்கிட்டே சொன்னதும், அதனை அவர் தயார் செய்து கொடுத்தார். அது இரண்டு மூன்று பக்கங்களுக்கு மேல் வருகிறது. அந்த அளவிற்கு சாதனைகள். சமூக நீதி சார்ந்து அவர் செய்த சாதனைகள் அவர் செய்த ஒவ்வொரு விஷயங்களும் மிகப்பெரிய விஷயம். குறிப்பாக பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், மலைவாழ் மக்கள்,



புரட்சித் தமிழன்

**சத்யராஜ்**

பெண்கள், சிறுபான்மையினர், மாற்றுத் திறனாளிகள் என்று எல்லோருக்கும் அவர் செய்த இட ஒதுக்கீடுகள். அந்த இட ஒதுக்கீடுகளும் பெண் உரிமையும், பெண்கள் விடுதலையும்தானே சமூக நீதியின் முக்கியமான கூறுகள்.

அதனை மிகவும் அழகாக, தான் ஆட்சியில் இருந்த ஒவ்வொரு முறையும் வேறு யார் ஆட்சிக்கு வந்தாலும் அதனை அசைக்க முடியாத அளவிற்கு அதனை ஆணித்தரமாக அந்தச் சட்டங்களை இயற்றியவர் நமது கலைஞர் அவர்கள். அவருடைய நூற்றாண்டு விழாவிற்கு என்னுடைய கட்டுரை 'முரசொலி'யில் இடம் பெறுவதில் நான் மிகவும் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் கருதுகிறேன்.

## “ராஜாராணி” - திரைப்படத்தில்!



தமிழ், செந்தமிழ், உலகத்தோடு பிறந்த தமிழ், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ்!

கவிதை புனையத் தெரியாத புலவன், கத்தி தூக்கத் தெரியாத வீரன், இவர்களைத் தமிழகம் இதுவரை கண்டதே இல்லை!

கங்கை நதி தீரத்திலே போராடினான், தமிழன் காவிரியின் ஓரத்திலே புகழ் பாடினான். பொங்கு கடல் அத்தனையும் கட்டி ஆண்டான் பூதலத்தில் மேலோன் - என உலகம் போற்ற வாழ்ந்த புற நானூற்றுக் கதை!

வட்ட நிலா, கட்டிக் கரும்பு, என்கிறீர்களே, உங்கள் ராணி ஒரு பட்ட மரம்! பட்ட மரம் துளிர்க்காது, கெட்ட பால் சுவைக்காது!

- கலைஞர்